<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு</u>

முன்னிலை : வி.சுரேஷ், B.A., B.L.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் நாள் திங்கட்கிழமை

<u>அமர்வு வழக்கு எண்.89/2024</u>

(CNR No.TNED01-004084-2024)

(ஈரோடு, ரயில்வே காவல்நிலையம், குற்ற எண்.91/2016)

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | : | காவல் ஆய்வாளர்,<br>ஈரோடு, ரயில்வே காவல்நிலையம்,<br>குற்ற எண்.91/2016 |
| எதிரிகள் | : | 1. குருசாமி, த/பெ. ராமலிங்கம் (SC.No.22 of 2023 வழக்கின் எதிரி)<br>A2. மாரியப்பன், த/பெ.உலகநாதன் |
| 2ம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் | | <u>முதலாவது குற்றச்சாட்டு</u><br>2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 328 – மயக்க மருந்து கொடுத்து நிகழ்நிலை புகார்தாரரை மயக்கமடைய செய்தல்<br><u>இரண்டாவது குற்றச்சாட்டு</u><br>2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 379 –பணத்தை திருடுதல் |
| 2ம் எதிரியின் பதில் | : | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை. |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| நீதிபதியின் தீர்ப்பு | : | 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 2ம் எதிரியை குவிமுச பிரிவு 235(1) –ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 01–04–2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்ததில், அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.எம்.சதீஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருவி.ஏ.லோகநாதன் (LADCS வழக்கறிஞர்) அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

01. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

(i) பெங்களூர், அல்டின் டவுன், கே.ஆர்.பி.சாலை, கதவு எண்.152–ல் வசித்து வந்த நிகழ்நிலை புகார்தாரரான ஜோசப் மகன் கே.ஜே.தாமஸ் என்பவர் 17–08–2015ம் தேதியில் இரவு சுமார் 2.00 மணியளவில் பெங்களூரிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லும் 16526 ஐலேண்ட் விரைவு ரயிலில் பயணம் செய்துவந்ததில் ரயில் வண்டி ஈரோடு ரயில்நிலைய பிளாட்பார்ம் எண்.2ல் நின்றுகொண்டிருந்தது. அந்த சமயத்தில் 1ம் எதிரி குருசாமி மற்றும் 2ம் எதிரி மாரியப்பன் ஆகியோர்கள் நிகழ்நிலை புகார்தாரர் கே.ஜே.தாமஸ் என்பவரிடம் உள்ள பணத்தை திருடவேண்டுமென்ற எண்ணத்தில் டீயில் மயக்க மருந்து கலந்து அவருக்கு கொடுத்து குடிக்க வைத்து அவரை மயக்கமடைய செய்துள்ளார்கள்.

(ii) மயக்கத்தில் இருந்த நிகழ்நிலை புகார்தாரர் கே.ஜே.தாமஸ் என்பவரின் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.10,000/–தை 1ம் எதிரி குருசாமி மற்றும் 2ம் எதிரி மாரியப்பன் ஆகியோர்கள் திருடிச்சென்றுள்ளார்கள். நிகழ்நிலை புகார்தாரர் கே.ஜே.தாமஸ் ஆலம்புழா மருத்துவமனையில் உள்நோயாளிக சிகிச்சையில் இருந்தபொழுது எர்ணாகுளம் ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் அங்கு சென்று நிகழ்நிலைபுகார்தாரரிடம் புகாரைப் பெற்றார். அதன்பிறகு காவல் நிலையம் சென்று நிலையப் பொறுப்பு அதிகாரியிடம் புகாரை ஒப்படைத்தார். காவல் உதவி ஆய்வாளர் புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண்.482/2015ல் இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். ஆள்வரை காரணமாக வழக்கு ஈரோடு இரும்புபாதை காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

(iii) ஈரோடு இரும்புபாதை காவல் நிலையத்தில் கற்ற எண்.91/2016ல் இதர பிரிவுகள் 328 மற்றும் 379ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் ஆய்வாளர் புலன் விசாரணை எடுத்துக்கொண்டார். நிகழ்நிலை புகார்தாரர், காவல் உதவி ஆய்வாளர் வர்கீஸ் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் மோகன்தாஸ் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நிலையக் குற்ற எண்.79/2019 வழக்கில் பழனியம்மாள் என்பவரை கைது செய்ததில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் இருவரும் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலில் வைக்க காவல் ஆய்வாளர் நடவடிக்கைகளை எடுத்தார். மேலும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். புலன் விசாரணை முடித்து காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 328 மற்றும் 379ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

02. வழக்கு கோப்புகளை ஆராய்ந்து, 29–11–2022–ம் தேதியில் முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.36/2022–ல் ஈரோடு, நீதித்துறை நடுவர் II நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 2ம் எதிரி வழக்கில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னிட்டு, 2ம் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207–ன்படி வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. 2ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடிய குற்றங்கள் என்பதால் விசாரணைக்காக கு.வி.மு.ச பிரிவு 209 (ஆ)–ன் கீழ் வழக்கு ஈரோடு, முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஈரோடு, முதன்மை அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கை விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது.

03. 2ம் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னிட்டு குற்றச்சாட்டுகள் வனைவது குறித்து இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 2ம் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து 2ம் எதிரியிடம் விளக்கிக் கூறி வினவ 2ம் எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். அரசு தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை

04. அரசு தரப்பு வாய்மொழி சாட்சியங்களின் சாராம்சம்

(i) அ.சா.1 சரவணன் தனது சாட்சியத்தில் கடந்த 2016ம் வருடம் தான் ஈரோடு ரயில்வே பாதுகாப்பு படையில், CPDS டீமில் காவலராக பணியாற்றி

வந்தேன் என்றும், 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் 13ம் தேதியில் குருசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை கைது செய்து தங்க நகை மற்றும் செல்போன் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் கைப்பற்றியிருந்தார் என்றும், அதே வழக்கு சம்பந்தமாக 08-06-2019ம் தேதியில் பழனியம்மாள் என்ற எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்தார் என்றும், 08-06-2019ம் தேதியில் எதிரி பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தன் முன்னிலையிலும், காவலர் சுரேந்தர் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் குருசாமியும் மாரியப்பனும் தான் நிலைய குற்ற எண்.91/2016 வழக்கில் குற்ற சம்பவத்தை செய்துள்ளார்கள் என்பது தெரியவந்தது என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ii) அ.சா.2 சுரேந்தர் தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் தான் மதுரை ரயில்வே பாதுகாப்பு படையில், CPDS டீமில் காவலராக பணியாற்றி வந்தேன் என்றும், 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் 13ம் தேதியில் குருசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை கைது செய்து தங்க நகை மற்றும் செல்போன் ஆகியவற்றை ஈரோடு, ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் கைப்பற்றியிருந்தார் என்றும், அதே வழக்கு சம்பந்தமாக 08-06-2019ம் தேதியில் பழனியம்மாள் என்ற எதிரியை ஈரோடு, ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் கைது செய்தார் என்றும், 08-06-2019ம் தேதியில் எதிரி பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தன் முன்னிலையிலும், காவலர் சரவணன் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் குருசாமியும் மாரியப்பனும் தான் இந்த வழக்கு குற்ற எண்.91/2016 குற்ற சம்பவத்தை செய்துள்ளார்கள் என்பது தெரியவந்தது என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(iii) அ.சா.3 வர்கீஸ் தனது சாட்சியத்தில் தான் 2015ம் வருடம் கேரளா மாநிலம், எர்ணாகுளம், இரயில்வே காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும், 17-08-2015ம் தேதியில் தான் காவல் நிலையத்தில் அலுவலக பணியில் இருந்தபொழுது ஆலபுலா மருத்துவமனையில் இருந்து தகவல் வந்ததின் அடிப்படையில் தான் மருத்துவனை சென்றேன் என்றும், அங்கு சிகிச்சையில் இருந்த பாதிக்கப்பட்ட நபர் கே.ஜே.தாமஸ், தகப்பனார் பெயர் ஜோசப், கே.பி.ஆர் ரோடு, கதவு எண்.152, ஆஸ்டின்டவுன், பெங்களூர்-47 என்பவரை விசாரித்தேன் என்றும், கே.ஜே.தாமஸின் வாக்குமூலம் பதிவு செய்து அதனை எர்ணாகுளம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(iv) அ.சா.4 மோகன்தாஸ் தனது சாட்சியத்தில் 17-08-2015ம் தேதியில் ஆலம்புலா மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர் திரு.வர்கீஸ் அவர்கள் சென்று பாதிக்கப்பட்ட நபரான கே.ஜே.தாமஸ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அதனை தன்னிடம் வந்து ஒப்படைத்தார் என்றும், அதனை பெற்று தான் நிலைய குற்ற எண்.482/2015ல் இதச பிரிவுகள் 328 & 379ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், அதன்பிறகு எல்லை நிமித்தமாக தமிழ்நாடு, ஈரோடு இரயில்வே காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(v) அ.சா.5 முருகன் தனது சாட்சியத்தில் கடந்த 2016ம் வருடம் ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக தான் பணியில் இருந்தபோது 26-03-2016ம் தேதியில் கேரளா மாநிலம், எர்ணாகுளம் இருப்புபாதை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து திருவனந்தபுரம்

காவல் கண்காணிப்பாளர் மூலமாக ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்திற்கு வந்த வழக்கு கோப்பை தான் பெற்றேன் என்றும், ஈரோடு இருப்புபாதை காவல் நிலைய குற்ற எண்.91/2016ல் இதச பிரிவுகள் 328, 379 –ன் கீழ் தான் வழக்கு பதிவு செய்தேன் என்றும், தொடர் புலன் விசாரணைக்கு வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் சமர்பித்தேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(vi) அ.சா. 6 சிவகாமிராணி தனது சாட்சியத்தில் வழக்கு புலன் விசாரணை எடுத்துக்கொண்டது குறித்தும், எதிரிகளை சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தது குறித்தும், புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

05. அரசு தரப்பு வாய்மொழி சாட்சியங்களில் 2ம் எதிரிக்கு எதிராக உள்ள சங்கதிகளை பிரித்தெடுத்து 2ம் எதிரிக்கு விளக்கி கூறி அது குறித்து குவிமுச பிரிவு 313 (1) (ஆ)–ன்படி வினவ 2ம் எதிரி மறுத்தார். 2ம் எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ அல்லது சான்று பொருட்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

06. 2ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

07. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

08. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் முரண்பாடுகள் இல்லாமல் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன்விசாரரைண செய்தது குறித்தும் அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், 2ம் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமென்றும் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் வாதிட்டார்.

09. நிகழ்நிலை புகார்தாரரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் தனிநபர்கள் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், காவல் துறையினரான அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், 2ம் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், 2ம் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 2ம் எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் 2ம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

10. நிகழ்நிலை புகார்தாரரான தாமஸ் என்பவருக்கு டீயில் மயக்க மருந்து கொடுத்து அவரிடமிருந்து எதிரிகள் இருவரும் சேர்ந்து ரூ.10,000/–த்தை திருடிச்சென்றுவிட்டார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

11. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தலைமை காவலர்கள் ஆவார்கள். அ.சா.3 முதல் அ.சா.5 ஆகியோர்கள் காவல் உதவி ஆய்வாளர்கள் ஆவார்கள்.

அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி ஆவார். பலமுறை நிகழ்நிலை புகார்தாரருக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பியும் சார்வு செய்ய இயலவில்லை. நிகழ்நிலை புகார்தாரர் எங்குள்ளார் என்பது பற்றி கண்டறியமுடியவில்லை என்று காவல் துறையுனரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்திலிருந்து விரைவு தபால் மூலம் ஒப்புகையுடன் நிகழ்நிலை புகார்தாரருக்கு சாட்சி சம்மன் அனுப்பியதில் அவ்வாறு ஒரு நபர் இல்லையென்று திருப்பப்பட்டுவிட்டது. காவல்துறையினரும் விரைவு தபாலில் நிகழ்நிலை புகார்தாரருக்கு சாட்சி சம்மனை அனுப்பியதில் அவ்வாறு ஒரு நபர் இல்லையென்று திருப்பப்பட்டுவிட்டது. இவ்வாறான சூழ்நிலையில், அரசு தரப்பில் நிகழ்நிலை புகார்தாரரை சாட்சியாக வழக்கில் விசாரிக்கவில்லை.

12. சம்பவத்தை கண்ணுற்ற நபர்கள் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை. நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. எர்ணாகுளம் இரும்புபாதை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கை வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.5 ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. பழனியம்மாள் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் இருவரும் இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது என்று அ.சா.1 மற்றும் அ.சா.2 தலைமை காவலர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். பழனியம்மாள் என்பவர் இவ்வழக்கின் எதிரி இல்லை. பழனியம்மாளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி எதுவும் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில், பழனியம்மாள் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2ம் எதிரி இவ்வழக்கின் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற அரசு தரப்பு வாதம் ஏற்கத்தக்கதல்ல.

13. மருத்துவமனை சென்று நிகழ்நிலை புகார்தாரரிடம் அ.சா.3 புகார் பெற்றுள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளையோ அல்லது எதிரிகளின் பெயரையோ கே.ஜே.தாமஸ் தன்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான் என்று குறிப்பிட்டுள்ளார். எர்ணாகுளம் இரும்புபாதை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கு எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக அ.சா.4 சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில், அ.சா.3 மற்றும் 4 ஆகியோர்களின் சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக கருத இயலாது.

14. ஈரோடு, இரும்புபாதை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தனது சாட்சியத்தில் நிகழ்நிலை புகார்தாரரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் சொந்த வேலையின் காரணமாக வெளியூரில் இருப்பதாகவும், வேலை முடித்த பிறகு வருவதாக தெரிவித்ததாகவும், முதல் தகவல் அறிக்கையில் ஒரு நபரைத் தான் எதிரியாக காட்டியுள்ளார் என்றால் சரிதான் என்று குறிப்பிட்டுள்ளார். ஈரோடு, இரும்புபாதை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 நிகழ்நிலை புகார்தாரரை விசாரிக்கவில்லை. ஈரோடு, இரும்புபாதை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அ.சா.6 நிகழ்நிலை புகார்தாரரை விசாரிக்கவில்லை. 2ம் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த புகாரை வழக்கில் தாக்கல் செய்து அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. 2ம் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தனிநபர்கள் யாரும் வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 ஆகியவைகள் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக கருத இயலாது.

எனவே, அரசு தரப்பில் 2ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லையென்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, 2ம் எதிரியை குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. பிணைய பத்திரங்கள் ஏதேனும் இருப்பின் அவைகளை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் அவைகள் குறித்து உத்திரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06–ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிப் பகரப்பட்டது.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.04.06 18:41:34 +0530

II கூடுதல் அமர்வு நீதிபதி
ஈரோடு

01. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 01) | அ.சா.01 | – | சரவணன், தலைமை காவலர் |
| 02) | அ.சா.02 | – | சுரேந்திர், தலைமை காவலர் |
| 03) | அ.சா.03 | – | வர்கீஸ், காவல் உதவி ஆய்வாளர் |
| 04) | அ.சா.04 | – | மோகன்தாஸ், காவல் உதவி ஆய்வாளர் |
| 05) | அ.சா.05 | – | முருகன், காவல் உதவி ஆய்வாளர் |
| 06) | அ.சா.06 | – | சிவகாமிராணி, காவல் ஆய்வாளர் |

02. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | அ.சா.ஆ.1 | – | 08–052019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.1ன் கையொப்பம் |
| 02) | அ.சா.ஆ.2 | – | 08–052019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.2ன் கையொப்பம் |
| 03) | அ.சா.ஆ.3 | – | 26–03–2016 | முதல் தகவல் அறிக்கை |

03. <u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> – இல்லை

04. <u>2ம் எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

05. <u>2ம் எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u> – இல்லை

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.04.06 18:41:43 +0530

II கூடுதல் அமர்வு நீதிபதி,
ஈரோடு

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு</u>

<u>அமர்வு வழக்கு எண்.89/2024</u>

<u>வழக்கின் சுருக்கம்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| i. | 2ம் எதிரி அடைப்புக் காவலில் இருந்த காலம் | From 21-06-2019 till 27-11-2019, From 19-08-2024 till 08-02-2025 and From 26-09-2025 till date. | | |
| ii. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள் | 29-11-2022 | | |
| iii. | வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள் | 05-08-2024 | | |
| iv. | 2ம் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 10-10-2025 | | |
| v. | வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு நீங்கலாக) | <u>A2</u><br>1.Crl.M.P. No.1021/2019 dated 09-07-2019<br>2.Crl.M.P. No.2493/2024 dated 05-08-2024<br>3.Crl.M.P. No.278/2025 dated 31-01-2025 | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | மு.வி. | கு.வி. |
| | | அ.சா.1 | 23-01-2026 | 23-01-2026 |
| | | அ.சா.2 | 23-01-2026 | 23-01-2026 |
| | | அ.சா.3 | 05-02-2026 | 05-02-2026 |
| | | அ.சா.4 | 05-02-2026 | 05-02-2026 |
| | | அ.சா.5 | 20-02-2026 | 20-02-2026 |
| | | அ.சா.6 | 11-03-2026 | 11-03-2026 |
| vii. | 2ம் எதிரி குவிமுச பிரிவு 313–ன் கீழ் வினவப்பட்ட நாள் | 16-03-2026 | | |

| | | |
|---|---|---|
| viii. | 2ம் எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான/ஆஜர் படுத்தப்பட்ட காலம் | A2 – 10–02–2020 முதல் 17–07–2024 |
| ix. | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும் | இல்லை |
| x. | தீர்ப்புரை நாள் | 06–04–2026 |

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2026.04.06 18:41:52 +0530

II கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு</u>

<u>அமர்வு வழக்கு எண்.89/2024</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றம் முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர்,<br>ஈரோடு, ரயில்வே காவல்நிலையம்,<br>குற்ற எண்.91/2016 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி. | : | A2. மாரியப்பன், த/பெ.உலகநாதன் |
| 3. | சம்பவ நாள் | : | 17–08–2015 |
| 4. | புகார் நாள்<br>(குற்ற இறுதி அறிக்கை நாள்) | : | 26–03–2016<br>24–06–2019 |
| 5. | 2ம் எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | A2– 21–06–2019 |
| 6. | 2ம் எதிரி பிணையில் சென்ற நாள் | : | A2– 27–11–2019 |
| 7. | எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் | : | 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழும் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 8. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்.; | : | 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 9. | எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு. |
| 10. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 10–10–2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 11–03–2026 |

| | | | |
|---|---|---|---|
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 13. | தீர்ப்பும் தண்டனையும் | : | 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 328 மற்றும் 379–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, 2ம் எதிரியை குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள். | : | இல்லை |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | –இல்லை– |

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.04.06 18:42:01 +0530

II கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

II கூடுதல் அமர்வு நீதிமன்றம்,
ஈரோடு
SC.No.89/2024
தீர்ப்புரை
நாள் :– 06–04–2026